## OS.No. 150/2022

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

2 ஆம் பிரதிவாதி ஆக்ட்டிங் டிரைவராக வந்திருக்கிறார் அதனால் அவரை தெரியும். கோவிந்தராஜ் என்னுடைய 2 வது மகன். கோவிந்தராஜின் மருமகன் பெயர் பூமிநாதன். எனக்கு வங்கி கணக்கு IOB யில் இருந்தது, தற்போது இல்லை. 16.10.2019 தேதியில் ஏற்பட்ட அடமான பத்திரத்தில் ரூ15,00,000 கடன் கொடுத்தேன். அந்த தொகையை ரொக்கமாகதான் கொடுத்தேன். அதற்கான ஆவணம் அடமான பத்திரம் தான். ரூ 15,00,000 த்தை ஒரே தவணையாக கொடுத்தேன். என் மனைவியின் நகைகளை விற்றும் என் சொத்துக்களை விற்றும் வைத்திருந்த தொகைகளுடன் என் தொழிலில் இருந்த தொகையையும் சேர்த்து வைத்திருந்தேன். வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் எனக்கு கிடையாது. என் மகன் கோவிந்தராஜின் துண்டுதலின் பேரில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTJ010061502022/truecopy/order-4.pdf